# கோரிக்கை எண் 50

## ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு 2017-2018

ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களின் குறைகளைத் தீர்ப்பதற்கும், ஓய்வூதிய பலன்களை விரைவாக வழங்குவதை உறுதி செய்வதற்கும் 1-9-1994 முதல் ஓய்வூதிய இயக்ககம் செயல்பட்டு வருகிறது. தமிழ் நாட்டில் 30-06-2017 ஆம் நாள் நிலவரப்படி சுமார் 7,42,088 ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் உள்ளனர். ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் குறித்த விவரம் பின்வருமாறு:

| வ. எண். | விவரம் | கருவூலம் மூலம் ஓய்வூதியம் பெறுபவர்கள் | பொதுத் துறை வங்கிகள் மூலம் ஓய்வூதியம் பெறுபவர்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | மாநில அரசு ஓய்வூதியதாரர்கள் | 3,58,166 | 48,608 | **4,06,774** |
| 2. | ஆசிரியர் ஓய்வூதியதாரர்கள் | 67,499 | 13,394 | **80,893** |
| 3. | மாநில அரசு குடும்ப ஓய்வூதியதாரர்கள் | 1,78,469 | 11,439 | **1,89,908** |

| வ. எண். | விவரம் | கருவூலம் மூலம் ஓய்வூதியம் பெறுபவர்கள் | பொதுத் துறை வங்கிகள் மூலம் ஓய்வூதியம் பெறுபவர்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 4. | ஆசிரியர் குடும்ப ஓய்வூதியதாரர்கள் | 26,542 | 4,607 | **31,149** |
| 5. | ஏனைய ஓய்வூதியதாரர்கள், கருணைத்தொகை மற்றும் ஓய்வூதியத் தொகுப்பில் மூன்றில் ஒரு பகுதி பெறும் ஓய்வூதியர்கள் உட்பட | 33,133 | 231 | **33,364** |
| | **மொத்தம்** | **6,63,809** | **78,279** | **7,42,088** |

**2.** இந்த மானியக் கோரிக்கையின் கீழ் அரசுப் பணியாளர்கள் மற்றும் அரசு நிதி உதவி பெறுகின்ற கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் பிற பணியாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியப் பயன்கள் அளிப்பது தொடர்பான முக்கியமான செலவினங்கள் இடம்பெற்றுள்ளன. இந்த மானியக் கோரிக்கையில், ஓய்வூதிய இயக்குநரகத்தின் செயல்பாடுகள், விடுதலைப் போராட்ட வீரர்கள் மற்றும் முன்னாள் இந்திய தேசிய இராணுவப் படை பணியாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் பிற பயன்கள் அளிப்பதும் அடங்கும்.

**3.** இந்த மானியக் கோரிக்கையின் கீழ், 2017-2018 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வுகாலப் பயன்களுக்கான செலவினத்தை மேற்கொள்ளும் பொருட்டு ₹ 22,375.22 கோடி ரூபாயும், சமூக பாதுகாப்பு மற்றும் நலன்களுக்காக ₹ 19.16 கோடி ரூபாயும், ஆக மொத்தம் ₹ 22,394.38 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஓய்வூதியம் (Pension).**

**4.** (i) ஓய்வூதியம் பெறத் தகுதி பெறுவதற்கு குறைந்தபட்ச தகுதி பணிக்காலம் 10 ஆண்டுகளாகும். முழு ஓய்வூதியம் பெறுவதற்கான பணிக்காலம் 33 ஆண்டுகளாக இருந்ததை 1-7-1996 முதல் 30 ஆண்டுகளாக குறைத்து அரசு ஆணையிட்டுள்ளது. மேலும், அரசுப் பணியாளர்கள் ஓய்வு பெறும் போது பெற்ற ஊதியத்தில் 50 சதவீதம் அல்லது இறுதி 10 மாத பணிக்கால அளவில் பெற்ற சராசரி ஊதியத்தில் 50 சதவீதம் இதில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஓய்வூதியம் கணக்கிடப்படுகிறது.

(ii) 1-1-2006 முதல் குறைந்தபட்ச மாத ஓய்வூதியம் ₹ 3,050/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## பணிக்கொடை(Gratuity).

**5.** (i) **ஆற்றிய பணிக்கான பணிக்கொடை (Service Gratuity).**

பத்து ஆண்டுகளுக்குக் குறைவாக தகுதிப் பணி புரிந்தவர்களுக்கு, அவர்கள் ஆற்றிய பணிக்கான பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது. முடிவுற்ற ஒவ்வொரு ஆறுமாத காலப்பணிக்கும் 1/2 மாத ஊதியம் என்ற ஒரே சீரான வீதத்தில் இப்பணிக்கொடை கணக்கிடப்படுகிறது. இது ஆற்றிய பணிக்காக அனுமதிக்கத்தக்க ஒய்வுகாலப் பணிக்கொடைக்கு கூடுதலாக மொத்தமாக வழங்கப்படுகின்ற தொகையாகும்.

(ii) **இறப்புப் பணிக்கொடை (Death Gratuity).**

அரசுப் பணியாளர் ஒருவர் பணியில் இருக்கும்போதே மரணமடையும் நேர்வில், பின்வரும் வீதங்களில் இறப்பு பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது:–

| வ. எண். | பணிக்காலம் | பணிக்கொடையின் வீதம் |
|---|---|---|
| 1. | ஓராண்டுக்குக் குறைவாக | மாத ஊதியத்தில் இரு மடங்கு |
| 2. | ஓராண்டு அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் ஐந்தாண்டுகளுக்குக் குறைவாக | மாத ஊதியத்தில் ஆறு மடங்கு |

| வ. எண். | பணிக்காலம் | பணிக்கொடையின் வீதம் |
|---|---|---|
| 3. | ஐந்தாண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் இருபதாண்டுகளுக்குக் குறைவாக | மாத ஊதியத்தில் பன்னிரண்டு மடங்கு |
| 4. | இருபதாண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக | அதிகபட்சமாக மாத ஊதியத்தில் 33 மடங்கு என்பதற்கு உட்பட்டு, முடிவுற்ற ஒவ்வோர் ஆறு மாதத் தகுதிப் பணிக்கும் அரைமாதச் சம்பளம். ஆனால், அவ்வாறு வழங்குகிற இறப்புப் பணிக் கொடை ₹ 10 இலட்சத்திற்கு மிகாமல் இருக்கும். |

## (iii) ஓய்வுகாலப் பணிக்கொடை **(Retirement Gratuity).**

ஒருவர், ஐந்தாண்டும் அதற்கு மேலும் தகுதிப் பணியை முடித்திருந்தால், அவர் ஓய்வு பெறும்போது உயரளவாக மாத ஊதியத்தில் **16$^{1}/_{2}$** மடங்கு என்ற அளவிற்கு உட்பட்டு, அவர் பணியாற்றி முடித்துள்ள ஒவ்வொரு ஆறு மாத தகுதிப் பணிக்கும் மாத ஊதியத்தில் நான்கில் ஒரு பங்கு ஓய்வுகாலப் பணிக்கொடையாக வழங்கப்படுகிறது. 1-1-2006 முதல் ஓய்வுகாலப் பணிக்கொடையின் உச்சவரம்புத் தொகை ₹ 10.00

இலட்சம் ஆகும். 1-4-1998 அன்று அல்லது அதற்குப்பிறகு ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு அவர்கள் கடைசியாகப் பெற்ற அடிப்படைச் சம்பளம் மற்றும் அகவிலைப்படியின் அடிப்படையில் பணிக்கொடை கணக்கிடப்படுகிறது. 1-1-2006 முதல் அடிப்படைச் சம்பளம் என்பது தர ஊதியத்தையும் உள்ளடக்கியதாகும்.

## குடும்ப ஓய்வூதியம் (**Family Pension**).

**6.**(i) அரசுப் பணியாளர் ஒருவர், பணியாற்றும்போதோ அல்லது ஓய்வு பெற்ற பின்னரோ இறந்து விட்டால், அவரது குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியுடையதாகும். ஒருவர் பணியிலிருக்கும்போது இறந்து விட்டால், அவருடைய குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதி பெற, அவர் தம்முடைய பணிக்காலத்தில் ஓய்வூதியம் பெறத் தகுதியுடைய பதவியில் தொடர்ந்து ஓராண்டு காலம் பணியாற்றியிருக்க வேண்டும். அரசுப் பணியாளர் பணியில் இருக்கும்போது இறக்கும் நேர்வுகளில், அவர் இறந்த பின்னர் 7 ஆண்டுகள் வரை குடும்ப ஓய்வூதியம், அவர் கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் 50 விழுக்காடு வழங்கப்படுகிறது. அதன் பின்னர்

குடும்ப ஓய்வூதியம் முறைப்படுத்தப்பட்டு அவர் கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் 30 விழுக்காடாக அளிக்கப்படும். அரசுப் பணியாளர் ஒருவர் தொடர்ந்து ஓராண்டு காலம் பணியாற்றுவதற்கு முன்பே பணியிலிருக்கும் போது இறந்து விடுவாரேயானால், அவருடைய குடும்பத்திற்கும் குடும்ப ஓய்வூதியம் அனுமதிக்கப்படுகிறது. ஆனால், அந்தப் பணி அல்லது பதவியில் நியமனம் செய்யப்படுவதற்கு முன் அவரை மருத்துவ அதிகாரி மருத்துவப் பரிசோதனை செய்து அரசுப் பணிக்கு அவர் தகுதியானவர் என்று அறிவித்திருக்க வேண்டும். ஓய்வு பெற்ற பின்னர் இறந்துவிட்டால், அவருடைய குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதி பெற, அவர் இறக்கும் போது ஓய்வூதியம் பெறுபவராக இருந்திருக்க வேண்டும்.

(ii) விதவை அல்லது மனைவியை இழந்த கணவனுக்கு, அவர் மறுமணம் செய்து கொள்ளும் வரையில் அல்லது இறக்கும் வரையில் இதில் எது முந்தியதோ அதுவரையில் அவருக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. அவருடைய

இறப்பிற்குப் பிறகு, அவருடைய குழந்தைகளுக்கு 25 வயது ஆகும் வரையிலோ அல்லது அவர்கள் திருமணம் செய்துகொள்ளும் வரையிலோ இதில் எது முந்தையதோ அதுவரை குடும்ப ஓய்வூதியம் அளிக்கப்படுகிறது. எனினும் அத்தகைய மகன் அல்லது திருமணமாகாத மகள் 25 வயதை அடைந்த பிறகும்கூட, பொருளீட்ட அல்லது வாழ்க்கை நடத்த இயலாத அளவுக்கு மனநலம் குன்றியவராக அல்லது மனநலமற்றவராக அல்லது மாற்றுத்திறனாளியாக இருந்தாலோ அவருக்கு, வாழ்நாள் முழுவதும் குடும்ப ஓய்வூதியம் அளிக்கப்படும். 28-11-2011 முதல் இம்மாநில ஓய்வூதியதாரர்களின் மணமாகாத / விவாகரத்து பெற்ற / விதவை மகள்களுக்கும், சில நிபந்தனைகளுக்குட்பட்டு வாழ்நாள் குடும்ப ஓய்வூதியமாக ₹ 3,050/- மருத்துவ படியுடன் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

(iii) அரசு ஊழியர்கள் / ஓய்வூதியதாரர்களின் **25** வயதுக்கு மேற்பட்ட திருமணமாகாத / விதவை /

விவாகரத்தான மகள்களுக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்குவது போல், திருநங்கைகள் / அரவாணி குழந்தைகளை மகள்களாக கருதி அவர்களுக்கும் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

(iv) 1-1-2006 முதல் வழங்கப்படும் குறைந்தளவு குடும்ப ஓய்வூதியம் மாதம் ₹ 3,050/- ஆகும்.

**கருணைத் தொகை (Ex-Gratia Payment).**

**7.** பங்களிப்பு வருங்கால வைப்பு நிதி / மாநில அரசின் ஓய்வூதியமில்லாத பணியாளர் அமைப்பைச் சேர்ந்த இறந்த பணியாளர் குடும்பங்களுக்கும், 1-1-1986க்கு முன் பணியிலிருந்து ஓய்வுபெற்ற / பணியிலிருக்கும் போது இறந்துவிட்ட முன்னாள் மாவட்ட வாரியப் பணியாளர்களுக்கும், குடும்ப ஓய்வூதியம் பெற தகுதியில்லாத நபர்களுக்கும் 1-1-2017 முதல் மாதமொன்றுக்கு வழங்கப்படும் கருணைத் தொகை ₹ 645/- உடன் 256 சதவீத அகவிலைப்படியும் தற்போது வழங்கப்படுகிறது.

**ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாக அளித்தல் (Commutation of Pension).**

**8.** ஓய்வூதியம் பெறுவோர், தமது ஓய்வூதியத் தொகையில் $33^{1}/_{3}$ விழுக்காடு வரையிலான ஓய்வூதியத் தொகையினை ஒட்டு மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம். ஓய்வூதியம் வழங்குவதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து ஓராண்டுக்குள் அவர்கள் விண்ணப்பித்திருந்தால், மருத்துவ பரிசோதனை இல்லாமல், ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாகப் பெற மாநிலக் கணக்குத் துறைத் தலைவரால் அனுமதி வழங்கப்படுகிறது. இச்சலுகை, விருப்பத்தின்பேரில் பணியிலிருந்து ஓய்வு பெறுபவர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. ஓய்வு பெற்ற நாளும், ஓய்வூதியத்தின் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற்றுக் கொண்ட நாளும் ஒரே நாளாக இருக்குமாயின் அவ்வாறு ஓய்வு பெற்றவர் அவர் ஓய்வு பெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகளுக்குப் பிறகு அல்லது ஓய்வு பெற்ற பிறகு இரண்டாவது மாதத்திலோ அல்லது அதன் பின்னரோ ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற்றிருந்தால் அவ்வாறு ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகளுக்குப்

பிறகு ஓய்வூதியத்தில் குறைக்கப்பட்ட பகுதியை மீண்டும் சேர்த்தளித்து முழுமையாக ஓய்வூதியம் பெற்றிட அரசு அனுமதியளித்துள்ளது.

**ஏனைய ஓய்வுக்காலப் பயன்கள்.**

**9.** (i) ஓய்வு பெறும்போது கணக்கிலுள்ள ஈட்டிய விடுப்பில், உயரளவாக 240 நாட்களை ஒப்படைப்பு செய்து விடுப்புச் சம்பளம் பெற அனுமதிக்கப்படுகிறது.

(ii) ஓய்வு பெறும் போது, பணியாளர் கணக்கில் உள்ள சொந்த அலுவலுக்கான ஈட்டா விடுப்பில், அதிகபட்சமாக 180 நாட்களை **90** நாட்களாக மாற்றி முழு சம்பளத்திற்கு ஒப்படைப்பு செய்து ரொக்கமாகப் பெற அனுமதிக்கப்படுகிறது.

(iii) ஈட்டிய விடுப்பின் முழு அளவினையும் சொந்த அலுவல்கள் குறித்த அரை சம்பள விடுப்பினையும் ரொக்கமாகப் பெற அடிப்படைச் சம்பளத்துடன் தர ஊதியமும், அகவிலைப் படியும், வீட்டு வாடகைப்படியும் நகர ஈட்டுப்படியும் சேர்த்துக் கணக்கிட்டு வழங்கப்படுகிறது.

(iv) ஓய்வு பெறும் பணியாளர் ஓய்வு பெற்ற பின்னர் தன்னுடைய சொந்த ஊருக்கு அல்லது தான் சென்று வசிக்க விரும்பும் ஊருக்குச் செல்வதற்கான பயணப்படி வழங்கப்படுகிறது.

## ஓய்வூதியம் பெறுவோருக்கான ஏனைய பயன்கள்

**10. (அ) அகவிலைப்படி.**

(i) ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு, அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படுவது போலவே அகவிலைப்படி வழங்கப்படுகிறது.

(ii) இராணுவ ஓய்வூதியம் பெறும் மாநில அரசின் ஓய்வூதியதாரர்கள், மத்திய அரசின் ஓய்வூதியத் தொகைக்கான அகவிலைப் படியுடன், மாநில அரசின் ஓய்வூதியத்திற்கான அகவிலைப் படியையும் சேர்த்துப் பெற அனுமதிக்கப் படுகின்றனர்.

(iii) இராணுவத்தில் பணியாற்றிய பின் மறு வேலைவாய்ப்பு அடிப்படையில் மாநில அரசு குடிமைப் பணியில் **1–4–2003**க்கு முன்பு

வேலைவாய்ப்பு பெற்ற முன்னாள் படைவீரர்களின் குடும்பத்திற்கு **2–9–2016** முதல் இரண்டு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

**(ஆ) மருத்துவப்படி.**

(i) 1-6-2009 முதல் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெறுவோருக்கு மாதமொன்றுக்கு ₹ 100/- மருத்துவப்படி வழங்கப்படுகிறது.

(ii) தற்காலிக ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களும் அகவிலைப்படி மற்றும் மருத்துவப்படி பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

**(இ) பொங்கல் பரிசு.**

அனைத்திந்திய பணி உட்பட, மானியம் பெறும் கல்வி நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் அனைத்து வகை தனி ஓய்வூதியதாரர்கள் உட்பட ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் அனைவருக்கும் ஒட்டுமொத்த பொங்கல் பரிசுத் தொகையாக ₹ 500/- அரசு வழங்குகிறது.

**(ஈ) பண்டிகை முன்பணம்.**

அரசு ஊழியர்களை போல ஓய்வூதியதாரர்களுக்கும் பண்டிகை முன்பணம் வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகை ₹ 1,000/-லிருந்து ₹ 2,000/- ஆக 14-3-2013 முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

**ஓய்வூதியதாரர்கள் (வாழ்க்கைத்துணை உட்பட) / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 2014.**

**11.**(i) 1995-ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு ஓய்வூதியதாரர்களுக்கான மருத்துவ நல நிதித் திட்டத்திற்கு மாற்றாக தமிழ்நாடு ஓய்வூதியதாரர்கள் (வாழ்க்கைத்துணை உட்பட) / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், 2014 நான்கு ஆண்டுகளைக் கொண்ட ஒரு தொகுப்பு கால அளவிற்கு அதாவது 1-7-2014 முதல் 30-6-2018 முடிய, இரண்டு இலட்சம் ரூபாய் வரை பணச் செலவின்றி மருத்துவச் சிகிச்சை பெற்றுக் கொள்ளும்

வகையில், 1-7-2014 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களிடமிருந்து மாதம் ஒன்றுக்கு சந்தாத் தொகையாக ₹ 150/- பிடித்தம் செய்யப்படுகிறது.

(ii) தமிழ்நாடு ஓய்வூதியதாரர்களுக்கு ஏற்கனவே நடைமுறையில் இருந்த தமிழ்நாடு ஓய்வூதியதாரர்களுக்கான மருத்துவ நல நிதித் திட்டம்–1995ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட மருத்துவ சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சைகளை விட கூடுதலான மருத்துவ சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சைகளை இத்திட்டத்தில் ஓய்வூதியதாரர்கள் (வாழ்க்கைத்துணை உட்பட) / குடும்ப ஓய்வூதியதாரர்கள் பெறுவார்கள். இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாடு ஓய்வூதியதாரர்களுக்கான மருத்துவ நல நிதித் திட்டம்–1995-ன் கீழ் வாழ்நாள் முழுவதும் வழங்கப்பட்ட அதிகபட்ச மருத்துவ நிதியுதவியான ₹ 1.00 இலட்சத்திற்கு மாற்றாக தற்போது நான்கு ஆண்டுகளைக் கொண்ட ஒரு தொகுப்பு கால அளவிற்கு ₹ 2.00 இலட்சம் வரை பணச்செலவின்றி மருத்துவ சிகிச்சை பெற முடியும். இப்புதிய திட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து

அதாவது 1-7-2014 முதல் 30-06-2017 வரை 1,46,981 பயனாளிகள் ₹ 424.40 கோடி ரூபாய் மதிப்பிலான மருத்துவ உதவிகளைப் பெற்றுள்ளனர்.

**ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம்.**

**12.** 1-1-1997 முதல் ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்திற்கு, ஓய்வூதியத்திலிருந்து மாதமொன்றுக்கு சந்தாத் தொகையாக ₹ 80/- பிடித்தம் செய்யப்படுகிறது. இந்த நிதிக்கு ஒரு மாதத்திற்கான சந்தாத்தொகை செலுத்திய பிறகு, இறக்க நேரிடும் ஓய்வூதியதாரரின் குடும்பத்திற்கு 7-6-2013 முதல் உயர்த்தப்பட்ட ₹ 50,000/- வழங்கப்படுகிறது. 30-6-2017 வரை இத்திட்டத்தின்கீழ் இறந்துபோன 1,78,720 ஓய்வூதியதாரர்களின் குடும்பங்களுக்கு ₹ 597.50 கோடி ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு அரசு பணியாளர்கள் சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடை திட்டம்.

**13.** இத்திட்டம் 1-4-1984 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாதம் ₹ 20/- வீதம் 148 மாதங்கள் வரை அரசு பணியாளரிடம் பிடித்தம் செய்யப்பட்டு, அவர் பணியிலிருந்து ஓய்வுபெறும் போது, அவர் செலுத்திய பங்களிப்புத் தொகை, வட்டி மற்றும் அரசின் பங்குத் தொகையாக ₹ 10,000/-மும் சேர்த்து வழங்கப்படுகிறது. தமிழ்நாடு அரசு பணியாளர்கள் சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம், **2000** என்ற புதிய திட்டம் **01–10–2000** முதல் தொடங்கப்பட்டபின் முந்தைய திட்டத்தில் பணியாளர்கள் சேர்க்கை நிறுத்தப்பட்டது. எனினும் முந்தைய திட்டத்தில் சேர்க்கப்பட்ட பணியாளர்கள் ஓய்வுபெறும் போது உரிய பணப்பயன் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் 30-9-2000 வரை அரசுப் பணியில் உள்ள அனைத்து நிரந்தரப் பணி அரசு அலுவலர்களும் விருப்பத்தின்பேரில் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டு

₹ 50/- வீதம் மாதந்தோறும், ஓய்வு பெறும் மாதத்திற்கு முந்தைய மாதம் வரை செலுத்தி அத்தொகை ஓய்வு பெறும்போது வட்டியுடன் திரும்ப வழங்கப்படுகிறது.

1-10-2000 அன்றும், அதற்குப் பிறகும் பணியில் சேருபவர்களுக்கு இத்திட்டம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு மாதச் சந்தா தொகை ₹ 70/- ஆகும். இத்தொகையுடன் வட்டியும், அரசின் பங்குத் தொகை ₹ 10,000/-மும் சேர்த்து பணியில் இருந்து ஓய்வு பெறும் போது வழங்கப்படுகிறது.

மேற்கண்ட திட்டங்களுக்கு ஓய்வூதிய இயக்குநர் அவர்கள் மதிப்பீடு, கணக்கு ஒத்திசைவு மற்றும் கட்டுப்பாடு அலுவலர் ஆவார். வரவு–செலவுத் திட்டத்தில் அரசால் அனுமதிக்கும் தொகையை, ஓய்வு பெறும் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு, (அரசு உதவி பெறும் பள்ளிகள் / கல்லூரிகள் / தொழில்நுட்ப கல்லூரிகள் தவிர) அந்தந்தத் துறைகள் மூலம் தொகை வழங்கப்பட்டு தீர்வு செய்யப்படுகிறது.

**உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள் உட்பட அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்களுக்கான ஓய்வூதியம்.**

**14.** அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்களுக்கும், உள்ளாட்சி மன்றப் பணியாளர்களுக்கும் மாநில அரசுப் பணியாளர்களுக்கு அளிக்கப்படுவது போன்றே ஓய்வுக் காலப் பயன்கள் அனுமதிக்கப்படுகின்றன.

**கூடுதல் ஓய்வூதியம் / கூடுதல் குடும்ப ஓய்வூதியம்.**

**15.** 80 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு, அவர்களின் வயதிற்கு ஏற்ப அடிப்படை ஓய்வூதியம் / அடிப்படை குடும்ப ஓய்வூதியத்தில் கீழ்கண்டவாறு கூடுதல் ஓய்வூதியமாக / கூடுதல் குடும்ப ஓய்வூதியமாக 1-1-2011 முதல் வழங்கப்பட்டு வருகின்றது.

| வ. எண். | ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரர் வயது வரம்பு | கூடுதல் ஓய்வூதியம் / கூடுதல் குடும்ப ஓய்வூதியம் | 30-06-2017 அன்றுள்ளபடி ஓய்வூதியதாரர்கள்/ குடும்ப ஓய்வூதியதாரர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | 80 முதல் 84 வரை | அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 20% | 27,707 |

| வ. எண். | ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரர் வயது வரம்பு | கூடுதல் ஓய்வூதியம் / கூடுதல் குடும்ப ஓய்வூதியம் | 30-06-2017 அன்றுள்ளபடி ஓய்வூதியதாரர்கள்/ குடும்ப ஓய்வூதியதாரர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2. | 85 முதல் 89 வரை | அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 30% | 10,459 |
| 3. | 90 முதல் 94 வரை | அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 40% | 2,730 |
| 4. | 95 முதல் 99 வரை | அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 50% | 522 |
| 5. | 100 மற்றும் அதற்கு மேல் | அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 100% | 71 |
| | | மொத்தம் | **41,489** |

**16. கடந்த ஆண்டுகளில் ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்காலப் பயன்கள் குறித்து ஏற்பட்டுள்ள செலவு வருமாறு:—**

| ஆண்டு | ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக் காலப் பயன்கள் குறித்த மொத்தச் செலவு (ரூபாய் கோடியில்) | மொத்த வருவாய் கணக்கு வரவுகளில் சதவீதம். |
|---|---|---|
| 2001-2002 | 3,050.48 | 16.07 |
| 2002-2003 | 3,488.20 | 16.86 |
| 2003-2004 | 3,279.96 | 13.84 |
| 2004-2005 | 3,921.05 | 13.78 |

| ஆண்டு | ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக் காலப் பயன்கள் குறித்த மொத்தச் செலவு (ரூபாய் கோடியில்) | மொத்த வருவாய் கணக்கு வரவுகளில் சதவீதம். |
|---|---|---|
| 2005-2006 | 4,488.83 | 13.22 |
| 2006-2007 | 5,461.68 | 13.35 |
| 2007-2008 | 6,038.96 | 12.71 |
| 2008-2009 | 7,776.21 | 14.13 |
| 2009-2010 | 8,439.24 | 15.11 |
| 2010-2011 | 11,855.27 | 16.89 |
| 2011-2012 | 12,687.97 | 14.89 |
| 2012-2013 | 13,248.08 | 13.41 |
| 2013-2014 | 14,934.37 | 13.82 |
| 2014-2015 | 17,528.06 | 14.32 |
| 2015-2016 | 18,490.89 | 14.33 |
| 2016-2017 (RE) | 20,138.55 | 14.00 |
| 2017-2018 (BE) | 22,394.38 | 14.05 |

**மின்னணு ஓய்வூதியம் (e-Pension).**

**17.** ஓய்வூதியம் வழங்கும் நடைமுறையும் மற்றும் ஓய்வூதியதாரர்கள் தொடர்பான புள்ளிவிவரங்களையும் பெற கணினித் தகவல் மென்பொருள் அனைத்து மாவட்டங்கள் மற்றும் ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம்,

சென்னை ஆகிய இடங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், ஓய்வூதியதாரர்களின் ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வுக்காலப் பயன்களை நேரடியாக அவரவர் வங்கிக் கணக்குகளில் மின்னணு தீர்வு முறை (Electronic Clearing Service) / மண்டல மின்னணு தீர்வு முறை (Regional Electronic Clearing Service) வழியாக வரவு வைக்கப்படுகிறது. மேலும், முதன்மை மாநில கணக்காயரின் தொகுப்பிலுள்ள ஓய்வூதியம் குறித்த விவரங்கள் அனைத்தும் மின்னணு ஓய்வூதிய மையத் தொகுப்பிற்கு (e-Pension Central Server) மாற்றப்பட வழிவகை செய்வதன் மூலம் ஓய்வூதியம் குறித்த விவரங்களைத் துல்லியமாக பெறுவதோடு குறைந்த செலவு மற்றும் குறுகிய காலத்தில் அதிக பயன் பெற வழி ஏற்படும்.

**ஓய்வூதியதாரர்களின் நேர்காணல் (Mustering).**

**18.** மூத்த குடிமக்களுக்கு ஏற்படும் இடர்களை கருத்தில் கொண்டு, ஓய்வூதியதாரர் நேர்காணலை எளிமைப்படுத்தும் முயற்சியாக தேசிய தகவலியல் மையத்துடன் (NIC) இணைந்து ஓய்வூதியதாரர்களை

அடையாளம் காண மின்னணு விரல் ரேகை பதிவு செய்தல் முறை நடைமுறைப்படுத்தப்படுகிறது. வருங்காலங்களில் இந்த வசதியினை ஓய்வூதியதாரர்கள் வங்கிகள் மூலமும், இணையதளம் வாயிலாகவும் அடையாளம் காணும் மின்னணு பதிவு செய்தல் முறையினை பயன்படுத்தும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஓய்வூதியதாரர்களின் வருடாந்திர நேர்காணலின் போது ஆதார் எண்கள் ஓய்வூதியதாரர்களின் விவரங்களுடன் இணைக்கப்பட்டு வருகிறது. ஓய்வூதியதாரர்களுக்காக இந்திய அரசால் தொடங்கப்பட்ட உயிர்புள்ளியியல் துணைகொண்ட இலக்க முறை ஜீவன் பிரமான் சேவையாகும். தற்பொழுதுள்ள ஆதார் இணைப்பினை பயன்படுத்தி, ஓய்வூதியதாரர்கள் ஜீவன் பிரமான் இணையதளம் வழியாக ஆதார் உயிர்புள்ளியியல் சான்றளிப்பின் அடிப்படையில் அரசு முகமையினால் வழங்கப்படும் வாழ்வுச் சான்றிதழ் ஒரு தகுதிவாய்ந்த சான்றிதழாக ஏற்கப்படுவதால், ஓய்வூதியதாரர்கள் ஜீவன் பிரமான் இணையதளம் வழியாக இச்சேவையினை பயன்படுத்திகொள்ள ஊக்கப்படுத்தப்படுகிறது.

ஆதார் எண்களை ஓய்வூதியதாரர்களின் விவரங்களுடன் 100 சதவீதம் இணைக்கும் நடவடிக்கையினை அரசு தீவிரப்படுத்தி வருகிறது. இப்பணி நிறைவேற்றப்பட்டவுடன், எந்த விதமான இடர்பாடுகளும் இல்லாமல் அனைத்து ஓய்வூதியதாரர்களும் ஜீவன் பிரமான் இணையதளம் வழியாகவே வாழ்வுச் சான்றிதழை அளிக்க பயன்படுத்தலாம். இந்த ஆண்டு எந்தவிதமான இடர்பாடுகளும் இல்லாமல் 1,65,136 ஓய்வூதியதாரர்களும் ஜீவன் பிரமான் இணையதளம் வழியாகவே வாழ்வு சான்றிதழ் அளித்துள்ளார்கள். இதனால் ஓய்வூதியம் வழங்கும் அலுவலர் ஓய்வூதியரின் நேர்காணலுக்கு அல்லது உரிய அலுவலரால் வழங்கப்படும் வாழ்வுச் சான்றிதழுக்கு வற்புறுத்தாமல் இணையதளம் மூலம் வாழ்வுச் சான்றிதழை பதிவிறக்கம் செய்து பயன்படுத்த வழிவகை ஏற்படும்.

**19.** இது தவிர எதிர்காலத்தில் ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மை திட்டம் செயல்படுத்தப்படும்போது ஓய்வூதியதாரர்கள் தங்களுக்கான அரசின் சேவைகள் அனைத்தையும் எவ்வித சிரமமுமின்றி இதன் மூலம் மிக எளிதான முறையில் பெற முடியும்.

## ஓய்வூதிய பதிவுகள் மின்னணுமயமாக்கல் (Digitization).

**20.** ஓய்வூதியம் பெறும் ஆணைகளையும், பிற பதிவுகளையும் கணினிமயமாக்க ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், சென்னை மற்றும் அனைத்து கருவூலங்களில் மின்னணுமயமாக்கல் செய்யப்பட்டு இந்த பதிவுகளை மின்னணு ஓய்வூதிய மென் பொருளில் இணைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இதற்கென அரசு ₹ 1.26 கோடி ரூபாய் நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது. மின்னணுமயமாக்கலுக்கு பின்னர், பதிவுகள் மற்றும் தகவல்களை நீண்ட காலம் பாதுகாப்பாக வைக்கவும், ஒரே நேரத்தில் பதிவுகளை ஓய்வூதியதாரர் உட்பட பலர் எல்லைகளை கடந்து பயன்படுத்தவும், பார்வையிடவும் இது வழிவகுப்பதோடு, கணினிமயமாக்குவதன் காரணமாக பதிவுகள் சிதைவு மற்றும் நிறமாற்றம் தவிர்க்கப்பட்டு, தெளிவாக மேம்பட்ட தரத்துடன் அவற்றைப் பாதுகாக்க இயலும்.

மேலும், சென்னை மாநில கணக்காயர் அலுவலகத்தில் உள்ள ஓய்வூதியம் தொடர்பான ஆவணங்களை மின்னனுமயமாக்கம் செய்திட அரசு ₹ 46.38 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது.

ஓய்வூதியதாரர்கள்/குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு அடையாள அட்டை (Identity Card) வழங்கிட அரசு ஆணையிட்டுள்ளது.

**பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்.**

**21.** 1-4-2003 ஆம் நாள் அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ பணியில் சேர்ந்துள்ள பணியாளர்கள் பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். 1-4-2003 அன்று அல்லது அதற்குப் பின்னர் பணியில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளர்களிடமிருந்து புதிய ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்பாக அடிப்படை ஊதியம் (ஊதிய கட்டில் உள்ள ஊதியம் மற்றும் தர ஊதியம்) மற்றும் அகவிலைப்படியில் 10 சதவீதம் பிடித்தம் செய்யப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், அரசு அதற்கு சமமான அளவு பங்குத் தொகையினை செலுத்துகின்றது. கருவூலக் கணக்கு ஆணையரகம் அரசு தகவல் தொகுப்பு விவர மையத்தின் உதவியுடன் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கணக்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ், 31-3-2017ஆம் நாள் நிலவரப்படி சுமார் 4,62,327அரசு, உள்ளாட்சி அமைப்பு மற்றும் அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்கள் கொண்டு வரப்பட்டு, பங்களிப்புத் தொகை மற்றும் வட்டி உட்பட மொத்தம்

₹ 18,016 கோடி ரூபாய் ஓய்வூதிய பொதுக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது.

பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பணி ஓய்வு பெற்றவர்கள், பணிதுறப்பு, இறந்த மற்றும் பணி முற்றுவிப்பு செய்த 3062 பணியாளர்களுக்கு இறுதியாக சேர வேண்டிய தொகையை வழங்குவதற்கு அரசு ₹ 115.10 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது.

## ஓய்வூதிய இயக்குநரகம்

**22.** அரசு 1-9-1994 முதல் ஓய்வூதிய இயக்ககத்தை உருவாக்கியது. இவ்வியக்ககம் தற்போது நிதித் துறை கூடுதல் செயலாளர் நிலையில் உள்ள அலுவலரை இயக்குநராகக் கொண்டுள்ளது. இயக்குநரைத் தவிர ஒரு இணை இயக்குநர், ஒரு துணை இயக்குநர், ஒரு கணக்கு அலுவலர், ஒரு உதவிக் கணக்கு அலுவலர், பிற அமைச்சுப் பணியாளர்கள் மற்றும் அடிப்படை பணியாளர்களின் துணையுடன் இயங்குகிறது. இந்த இயக்ககம், கீழ்க்கண்ட பணிகளை மேற்கொண்டு வருகிறது:

(i) மாநில அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஓய்வூதிய குறைகளைத் தீர்த்தல்.

(ii) ஓய்வூதியதாரர்களின் குறைகளை, ஓய்வூதிய அதாலத் அமைப்பு மூலம் தீர்த்தல்.

(iii) ஓய்வூதியதாரர்கள் கோரும் தெளிவுரைகளை வழங்கிடல்.

(iv) அரசுத் துறைகளின் தொழிற்சாலை பணியாளர்களின் சேமநல நிதித் திட்டம் தொடர்பான பணிகளை நிர்வகித்தல் மற்றும் நிறைவேற்றுதல்.

(v) தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்களின் மருத்துவ நலநிதித் திட்டம், 1995ன் கீழ் ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களின் நிலுவையிலுள்ள நேர்வுகளை தீர்வு செய்தல்.

(vi) குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்களின் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டம், 1997–ஐ நிர்வகித்தல் மற்றும் அதை செயல்முறைபடுத்துதல்.

(vii) தமிழ்நாடு அரசு பணியாளர்களின் சிறப்பு சேமநலநிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம், 1984–ன் மதிப்பீடு, கணக்கு ஒத்திசைவு மற்றும் கட்டுப்பாடு பணி.

(viii) தமிழ்நாடு அரசு பணியாளர்களின் சிறப்பு சேமநலநிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம், 2000–ன் மதிப்பீடு, கணக்கு ஒத்திசைவு மற்றும் கட்டுப்பாடு பணி.

(ix) ஓய்வூதிய இயக்ககத்தில் பணிபுரிவோரின் ஊதியம் மற்றும் இதர பயன்களின் வரவு செலவுத் திட்டம் மதிப்பீடு செய்தல் மற்றும் துறைக் கணக்குகளை சம்பள கணக்கு அலுவலகம் மற்றும் மாநில கணக்காயர் கணக்குகளுடன் ஒத்திசைவு பணி செய்தல்.

(x) அமைப்புச் சாரா தினக்கூலிப் பணியாளர்கள், தொழிலாளர்கள் மற்றும் பொது மக்களுக்கான தமிழ்நாடு அரசு சமூக பாதுகாப்புத் திட்டம், 1974–ஐ நிர்வகித்து நிறைவேற்றுதல்.

## ஓய்வூதியதாரர்கள் குறை தீர்வு

**ஓய்வூதிய இயக்ககத்தின் மூலம் ஓய்வூதியதாரர்களின் குறை தீர்த்தல்.**

**23.** பல்வேறு மாவட்டங்களிலுள்ள ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரர்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள், முதலமைச்சரின் தனிப்பிரிவு மூலமாகவும், தகவல் அறியும்

உரிமைச் சட்டத்தின் மூலமாகவும் பெறப்படும் மனுக்கள் மீது உரிய கவனம் செலுத்தப்பட்டு, ஓய்வூதியதாரர்களின் குறைகள் உடனடியாக தீர்வு காண நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன. 2016–ஆம் ஆண்டில் முதலமைச்சரின் தனிப்பிரிவிலிருந்து 702 மனுக்களும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் 609 மனுக்களும் பெறப்பட்டு பதில் அளிக்கப்பட்டது. இது தவிர மாவட்டங்களிலிருந்து பெறப்பட்ட 1317 மனுக்களில் 1302 மனுக்கள் ஓய்வூதிய இயக்ககத்தில் தீர்வு செய்யப்பட்டன. மேலும், மனுதாரர்களின் குறைகள் மீது துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு களையப்பட்டு வருகின்றன.

**மாவட்ட ஆட்சித் தலைவர்களின் ஓய்வூதியதாரர் குறை தீர்க்கும் நாள் கூட்டம்.**

**24.** மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஓய்வூதியதாரர்களின் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தினை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை தங்களது மாவட்டங்களில் நடத்துகின்றனர். இக்கூட்டத்தில், இயக்குநர் அல்லது இணை

இயக்குநர் பங்கேற்று, அம்மாவட்டத்திலுள்ள ஓய்வூதியதாரர்களின் குறைகள் கேட்டறியப்பட்டு, அவற்றை விரைந்து களைந்திட மாவட்ட ஆட்சியருக்கு உதவி புரிகின்றனர். ஓய்வூதிய பலன்கள் தொடர்பான கோப்புகள் மாநில கணக்காயர் அலுவலகத்தில் நிலுவையிலிருந்தால் அவற்றை விரைந்து முடித்திட, இவ்வியக்ககத்தால் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாவட்ட வாரியான குறை தீர்க்கும் மனுக்கள் மீது தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, துறைவாரியாக துறை அலுவலர்களுடன் கூட்டம் நடத்தப்பட்டு ஓய்வூதியதாரர்களின் குறைகள் தீர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**ஓய்வூதிய அதாலத்.**

**25.** ஓய்வூதியதாரர்களின் குறை தீர்ப்பதற்கென்று லோக் அதாலத், உயர்நீதிமன்ற வளாகத்திலுள்ள தமிழ்நாடு சட்ட பணிகள் ஆணையத்தில் 22-2-2002 முதல் செயல்படுகிறது. ஓய்வூதிய அதாலத் முன்பு வைக்கப்படும்

ஓய்வூதியதாரர் குறைகள் மீது வழங்கப்படும் உத்தரவின்மீது தொடர் நடவடிக்கை எடுத்து செயல்படுத்திட, ஓய்வூதிய இயக்குநர், சம்பந்தப்பட்ட தலைமைச் செயலகத் துறைகளைச் சார்ந்த அலுவலர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் மாநிலக் கணக்காயரின் பிரதிநிதி ஆகியோரை உள்ளடக்கிய ஒரு குழுவினை அரசு அமைத்துள்ளது. ஓய்வூதிய துறை இயக்குநர் ஓய்வூதிய அதாலத் ஒருங்கிணைப்பு அலுவலராவார் (Nodal Officer). மாதம் இரு முறை இந்த அதாலத் நடைபெறுகிறது. 1-1-2016 முதல் 31-12-2016 வரை 121 ஓய்வூதியதாரர்களின் மனுக்கள் விசாரிக்கப்பட்டு 88 மனுக்கள் மீது தீர்வு காணப்பட்டுள்ளன.

**ஓய்வூதியம் வழங்கும் அலுவலர், தொடர்பு வங்கி அலுவலர்கள் மற்றும் ஓய்வூதிய சங்கங்கள் தொடர்பான கூட்டம்.**

**26.** ஓய்வூதிய இயக்குநர், ஓய்வூதியதாரர் சங்கப் பிரதிநிதிகளின் முன்னிலையில் ஓய்வூதியம் வழங்கும் அலுவலர் மற்றும் தொடர்பு வங்கி அலுவலர்களுடன் மாதாந்திர கூட்டங்கள் நடத்தி, ஓய்வூதியதாரர்களுக்கு வங்கிகள் மூலம் செயல்படுத்தப்படும் பொதுத் துறை

வங்கித் திட்டம் மூலமும், சென்னையிலுள்ள ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் மூலம் செயல்படுத்தப்படும் முன்னோடித்திட்டம் மூலமும், ஓய்வூதியம் பெறுவதில் ஏற்படும் பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றன.

**ஓய்வூதியர்களின் கையேடு.**

**27.** ஓய்வூதியங்கள் மற்றும் ஏனைய ஓய்வுக்காலப் பயன்கள், அவ்வப்பொழுது அரசால் வெளியிடப்படும் ஆணைகள், ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் கருத்துரு அனுப்ப வழிகாட்டுதல் ஆகியவற்றை ஓய்வூதியதாரர்கள் தெரிந்து கொள்ளும் பொருட்டு கையேடு ஒன்று தயார் செய்யப்பட்டு இணைய தளத்தில் (www.tn.gov.in/dop) வெளியிடப்பட்டுள்ளது. ஓய்வூதியப் படிவங்களை இணைய தளத்தில் இருந்து உடனடி உபயோகத்திற்காக பதிவிறக்கம் செய்யலாம். மின் அஞ்சல் மூலமாகவும் ஓய்வூதிய இயக்குநரகத்தை தொடர்பு கொள்ளலாம். இத்துறைக்கான மின் அஞ்சல் முகவரி dop@tn.nic.in.

**ஓய்வூதிய இயக்குநரக கணினிமயமாக்கம்.**

**28.** தேசிய தகவல் மையம் உருவாக்கியுள்ள மென்பொருளைக் கொண்டு, மருத்துவ நலநிதித் திட்டம், மற்றும் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டம் முழுமையாக கணினிமயமாக்கப்பட்டுள்ளது. அதன்மூலம் தேவையான அடிப்படை விபரங்கள் அளிக்கப்பட்டு, ஒப்பளிப்பு ஆணைகள் வெளியிடப்படுகின்றன. அதைப்போன்று, ஏற்கெனவே கணினிமயமாக்கப்பட்டுள்ள தொழிலாளர் சேமநலநிதித் திட்டமும் தேசிய தகவலியல் மையத்தால் சிறு மாற்றங்களுடன் முழுமைப்படுத்தி கணினி மயமாக்கப்பட்டுள்ளது. இத்தகைய ஓய்வூதியதாரர்களின் நலத்திட்டங்களில் பெறும் உதவிப் பணத்தை மின்னணு பணப் பட்டுவாடா முறையில் (E.C.S.) ரிசர்வ் வங்கி மூலமாக அவரவர் வங்கிக் கணக்குகளில், கணினி மூலம் நேரடியாக பணம் பட்டுவாடா செய்யும் ஏற்பாட்டை நடைமுறைப்படுத்த தேசிய தகவலியல் மையம், ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், கருவூலம் மற்றும் வங்கி அலுவலர்களோடு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கணினி மூலம் பணம் பட்டுவாடா செய்வதன் மூலம், காசோலை மூலம் பணம் அனுப்புவது நிறுத்தப்பட்டு, உடனடியாக வங்கிகள் மூலம் அவரவர் வங்கி கணக்குகளில் பணம் வரவு வைக்கப்படுவது உறுதிபடுத்தப்படுகிறது.

**விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் முன்னாள் இந்திய தேசிய ராணுவத்தினருக்கும் ஓய்வூதியம் மற்றும் ஏனைய பயன்கள்.**

**29.** விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டு நமது நாட்டின் விடுதலைக்காக பாடுபட்ட தியாகிகளுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் உதவிகள் வழங்குவதில் தமிழ்நாடு அரசு எப்பொழுதும் முன்னுரிமை அளித்து வருகிறது. அவர்களின் நலனுக்காக விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் வழங்குதல், மருத்துவ வசதி, இலவசப் பேருந்து வசதி அளித்தல், வீடுகள் ஒதுக்கீடு மற்றும் அரசு வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை அளித்தல் போன்ற பல திட்டங்களை அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகின்றது.

**30.** விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியத் திட்டம் 1-10-1966 முதல் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்டு மூன்று மாத காலத்திற்குக் குறையாமல் சிறை தண்டனை பெற்றவர்கள் அல்லது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டவர்கள், துப்பாக்கி சூடு அல்லது சுதந்திரப் போராட்டத்தின்போது காவலர் தடியடி ஆகியவற்றில் இறந்தவர்கள் அல்லது நிரந்தரமாக ஊனமுற்றவர்கள் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் / குடும்ப

ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்களாவர். இது தவிர, இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றியவர்களுக்கும், 1946–ஆம் ஆண்டு கடற்படை கலகத்தில் பங்கு கொண்டவர்களுக்கும், மதுரை சதித்திட்ட வழக்கில் சிறைத் தண்டனை அடைந்தவர்களுக்கும் இத்திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது. மேலும், சுதந்திரப் போராட்டத்தின் போது பிடியாணை பிறப்பிக்கப்பட்டதை தவிர்ப்பதற்காகத் தலைமறைவாக இருந்து சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்டவர்களும், சொத்து பறிமுதல் செய்யப்பட்டவர்களும், அரசுப் பணியிலிருந்து பணிநீக்கம் செய்யப்பட்டவர்களும், அதற்கு ஆதாரமாக நீதிமன்ற அல்லது அரசு ஆவண ஆதாரங்களைச் சமர்ப்பித்தால் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்களாக இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். ஓய்வூதியம் பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளில் ஒன்றான மூன்று மாத கால சிறைவாசம் என்பது 1-4-1980 முதல் மூன்று வார காலம் எனக் குறைக்கப்பட்டது. இந்த ஓய்வூதியம் பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த வருமான உச்ச வரம்பு 11-3-1983 முதல் நீக்கப்பட்டது.

**31.** விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் அரசால் அவ்வப்போது உயர்த்தப்பட்டுள்ளது. 15-8-2016 முதல் இந்த ஓய்வூதிய தொகை மாதம் ₹ 11,000/-லிருந்து ₹ 12,000/-ஆக உயர்த்தப்பட்டு வழங்கப்படுகிறது.

**32.** மாநில அரசின் ஓய்வூதியம் பெற்று வருகின்ற விடுதலைப் போராட்ட வீரர் இறக்க நேரிட்டால், அன்னாரின் மனைவிக்கு / கணவருக்கு / உரிய வயதடையாத குழந்தைகளுக்குத் தொடர்ந்து குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. மேற்படி ஓய்வூதியம் பெற்று வருகின்ற விடுதலைப் போராட்ட வீரர்களின் மகனாயிருந்தால் 18 வயதுக்கு மேலும், மகளாயிருந்தால் 21 வயதுக்கு மேலும், சுயமாய் சம்பாதித்து வாழமுடியாத அளவிற்கு மனவளர்ச்சி குன்றியவராகவோ அல்லது மாற்றுத் திறனாளியாகவோ இருக்க நேர்ந்தால், அவர்களது வாழ்நாள் முழுமைக்கும், தொடர்ந்து ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இந்த குடும்ப ஓய்வூதியத் தொகையும் அவ்வப்போது உயர்த்தப்பட்டுள்ளது. 15-8-2016 முதல் குடும்ப ஓய்வூதிய தொகை மாதம் ₹ 5,500/-லிருந்து ₹ 6,000/-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**33.** விடுதலைப் போராட்ட இயக்கத்தில் பங்கு கொண்டு நாட்டிற்காக குறிப்பிடத்தக்க வகையில் சிறப்புற பணியாற்றிய மேலோரின் தியாகத்தைப் பாராட்டி அவர்களது வாரிசுகளுக்கும் சிறப்பு ஓய்வூதியமானது அரசால் வழங்கப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின்படி, சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின் வழித்தோன்றல்கள், வீரபாண்டிய கட்டபொம்மனின் நேரடியான முதுநிலை வழித்தோன்றல்கள், இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் மன்னர் முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதியின் தகுதியான வழித்தோன்றல்கள் ஆகியோருக்கு மாதம் ஒன்றிற்கு ₹ 6,000/-ஆக உயர்த்தி 15-8-2016 முதல் வழங்கப்பட்டு வருகிறது. தற்பொழுது, சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின் வழித்தோன்றல்கள் 94 பேர்கள், வீரபாண்டிய கட்டபொம்மனின் நேரடியான முதுநிலை வழித்தோன்றல்கள் 5 பேர்கள் மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் மன்னர் முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதியின் தகுதியான வழித்தோன்றல்கள் 65 பேர்களுக்கும் இந்த சிறப்பு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட பயனாளிகள் சிறப்பு ஓய்வூதியத்தை அவர்கள் வாழ்நாள் முழுவதும் பெறுவார்கள்.

**34.** விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் அவர்களது வாரிசுகளுக்கும் வழங்கப்படும் ஏனைய சலுகைகள் பற்றிய விவரம் பின்வருமாறு:

**(அ) மருத்துவ வசதிகள்:**

மத்திய அரசிடமிருந்தோ அல்லது மாநில அரசிடமிருந்தோ அல்லது இரண்டு அரசுகளிடமிருந்தோ ஓய்வூதியம் பெற்று வருகின்ற அனைத்து விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் / விதவைகளுக்கும் / உரிய வயதடையாத குழந்தைகளுக்கும் மருத்துவப்படி வழங்கப்பட்டு வருகிறது. இந்த தொகையானது மாதமொன்றிற்கு ₹ 100/–லிருந்து மாதமொன்றிற்கு ₹ 500/- ஆக உயர்த்தப்பட்டு 15-8-2012 முதல் வழங்கப்பட்டு வருகிறது. மேற்கூறிய விடுதலைப் போராட்ட வீரர்கள் அல்லது அவரது வாரிசுதாரர்கள் மருத்துவச் சிகிச்சைக்காக பழைய அரசு மருத்துவமனைகளுக்கு வரும்போது ‘அ’ வகுப்பு வசதிகளுடன் கூடிய இலவச மருத்துவ சிகிச்சையும், புதிய மருத்துவ மனைகளின் கட்டணப் பிரிவுகளில் எந்தவித கட்டணமும் இல்லாமல் சிகிச்சை வழங்கப்படுகிறது.

**(ஆ) போக்குவரத்து வசதி.**

மத்திய மற்றும் மாநில அரசு ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும், விடுதலைப் போராட்ட வீரர்களின் விதவைகள் மற்றும் அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கும் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் கட்டணமின்றி பயணம் செய்ய பயண அட்டை வழங்கப்பட்டுள்ளன.

**(இ) வீட்டு வசதி.**

தமிழ் நாடு வீட்டுவசதி வாரியம் ஒதுக்கீடு செய்யும் வீடுகளில் / மனைகளில் / அடுக்கு மாடி வீடுகளில், ஆதிதிராவிடர்/பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட 18 சதவிகிதத்திலிருந்தும், சலவையாளர் / நாவிதர்களுக்கு ஒதுக்கப்பட்ட 5 சதவிகிதத்திலிருந்தும் மற்றும் பொது மக்களுக்கு ஒதுக்கப்பட்ட 37 சதவிகிதத்திலிருந்தும் தலா ஒரு சதவிகிதம் வீதம் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

**(ஈ) வேலைவாய்ப்பில் முன்னுரிமை.**

வேலைவாய்ப்பு அலுவலகங்களிலிருந்து அரசுத் துறைகளுக்கும் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களுக்கும் வேலைவாய்ப்புக்குத் தகுதியான பெயர் பட்டியல் அனுப்பப்படும்பொழுது விடுதலைப் போராட்டத் தியாகிகளின் சட்டப்படியான வாரிசுதாரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது.

**(உ) ஈமச் சடங்குச் செலவு.**

விடுதலைப் போராட்ட வீரர் இறந்தால், அவர்தம் ஈமச் சடங்குச் செலவுக்காக விடுதலைப் போராட்ட வீரரின் மனைவிக்கு அல்லது அவருடைய நேரடி வாரிசுதாரர்களுக்கு உதவித் தொகையாக ₹ 5,000/- உடனடியாக வழங்கப்பட்டு வருகிறது. இறந்துபோன விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில், வட்டாட்சியருக்கு குறையாத பதவியிலுள்ள வருவாய்த் துறை அலுவலர் ஒருவரால் அரசு சார்பில் மறைந்தவரின் உடல் மீது மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தப்படுகிறது. மாநில அரசின் / மத்திய அரசின் ஓய்வூதியம் அல்லது இவ்விரண்டு ஓய்வூதியங்களையும் பெறுகின்ற விடுதலைப் போராட்ட வீரர்கள் அனைவருக்கும் இது பொருந்தும்.

**35.** தற்போது மாநில அரசின் பல்வேறு வகையான ஓய்வூதியங்களைப் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

| வ. எண் | பல்வேறு வகையான ஓய்வூதியங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | மாநில ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்கள் (மாதம் ஒன்றுக்கு ₹ 12,000/- + ₹ 500/- மருத்துவப்படி) | 222 |
| 2. | மாநில அரசின் குடும்ப ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களின் வாரிசுதாரர்கள் (மாதம் ஒன்றுக்கு ₹ 6,000/- + ₹ 500/- மருத்துவப்படி) | 1,297 |
| 3. | சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின் வழித்தோன்றல்கள் (மாதம் ஒன்றுக்கு ₹ 6,000/- வீதம்) | 94 |
| 4. | வீரபாண்டிய கட்டபொம்மன் வழித்தோன்றல்கள் (மாதம் ஒன்றுக்கு ₹ 6,000/- வீதம்) | 5 |
| 5. | மன்னர் முத்துராமலிங்க விஜய ரகுநாத சேதுபதியின் வழித்தோன்றல்கள் (மாதம் ஒன்றுக்கு ₹ 6,000/- வீதம்) | 65 |

**மத்திய அரசின் ஓய்வூதியத் திட்டம்.**

**36.** 15-8-1972 முதல் மத்திய அரசு விடுதலைப் போராட்ட வீரர்கள் ஓய்வூதியத் திட்டத்தை (Swatantrata Sainik Samman Pension) செயல்படுத்தி வருகிறது. தற்போது மத்திய அரசு இத்திட்டத்தினை ஸ்வதந்திரதா சைனிக் சம்மான் யோஜனா என **01–04–2017** முதல் பெயர் மாற்றம் செய்துள்ளது. இத்திட்டத்தின்படி வழங்கப்படும் சலுகைகள் பின்வருமாறு:

(i) மத்திய அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறும் ஒவ்வொருவருக்கும் மாதமொன்றிற்கு ₹ 26,000/- ஓய்வூதியத்துடன் 1-1-2017 முதல் 4 சதவீதம் அகவிலைப்படியும் சேர்த்து மொத்தம் ₹ 27,040/- வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு மைய அரசு ஓய்வூதியம் பெற்று வரும் விடுதலைப் போராட்ட வீரர்கள் மற்றும் வாரிசுதாரர்களின் எண்ணிக்கை 1,235 ஆகும்.

(ii) மத்திய அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெறுபவருக்கு, மாநில அரசின் நிதியிலிருந்து, ₹ 500/- ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

**37.** மேற்குறிப்பிட்ட விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியத் திட்டங்களுக்காக 2017-2018 ஆம் ஆண்டிற்கு ₹ 17,90,78,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**D.ஜெயக்குமார்**
**மீன்வளம், நிதி, பணியாளர் (ம) நிருவாகச்**
**சீர்திருத்தத் துறை அமைச்சர்.**



சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 23.05.2017 ஆம் நாள் அன்று நடைபெற்ற ஓய்வூதியர்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் (மீன்வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை) கலந்து கொண்டு ஓய்வூதியர்களுக்கு காசோலைகளை வழங்கினார்.